FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச்- 2015

## Term Examination, March - 2015

| நாடகமும் அரங்கியலும் - I | தரம் :- 13 (2015) | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி – I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ சரியான விடையின் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.

1) நடிகனது பிரதான பணியாகக் கருதப்படுவது யாது?
1) பாத்திரச்சித்தரிப்பு 2) நேரடித்தொடர்பாடல் 3) மகிழ்வூட்டுதல்
4) மோடிச்சித்தரிப்பு 5) வடிவச்சித்தரிப்பு ( )

2) கலைகள் ரசிகர்களிடத்தில் ஏற்படுத்தும் விளைவு யாது?
1) விமர்சனம் 2) ரசனை 3) சமூகச்சித்திரிப்பு
4) சமூக மாற்றத்தை ஏற்படுத்தல் 5) சிந்தனை தூண்டல் ( )

3) அரங்க மூலகங்களின் பயன்பாட்டைத் தீர்மானிக்கும் பிரதான கலைஞர் யார்?
1) நாடக ஆசிரியர் 2) தயாரிப்பாளர் 3) நடிகர்
4) மேடைமுகாமையாளர் 5) நெறியாளர் ( )

4) தமிழர்களின் அழகியல் சிந்தனையாக அமைவது யாது?
1) ரஸம் 2) நாடக இன்பம் 3) மெய்ப்பாடு
4) நாடகவழக்கு 5) உலகியல் வழக்கு ( )

5) நாடகத்தை உருவாக்குவது தொடர்பாக திட்டமிடும்போது முதலில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சம் யாது?
1) எழுத்துரு 2) கலைஞர்களின் தகைமை 3) அரங்கு
4) இலக்கு பார்வையாளர் 5) மோடி ( )

6) நாடகம் என்ற சொல்லுக்கு "கதை தழுவி வரும் கூத்து" என கருத்து கூறியவர் யார்?
1) இளம்பூரணர் 2) தொல்காப்பியனார் 3) அடியார்க்குநல்லார்
4) பரதர் 5) இளங்கோ அடிகள் ( )

7) எழுத்துரு இன்றித் தயாரிக்கும் அரங்கினை எவ்வாறு அழைப்பர்?
1) புதிதளித்தல் அரங்கு 2) காவிய அரங்கு 3) அபத்த அரங்கு
4) யதார்த்த அரங்கு 5) குரூர அரங்கு ( )

8) குறித்த பிரச்சனையை இனங்கண்டு, தெளிவுபடுத்தும் அரங்கு யாது?
1) படிம அரங்கு 2) புதிதளித்தல் அரங்கு 3) வறிய அரங்கு
4) யதார்த்த அரங்கு 5) கலந்துரையாடல் அரங்கு ( )

9) முற்றுமுழுதாக நாடகத்தை இலக்கிய நிலையில் நோக்கியவர் யார்?
1) பரதர் 2) அரிஸ்ரோட்டில் 3) தனஞ்யர்
4) அபிநவகுப்தர் 5) இளம்பூரணர் ( )

10) நாடகம் சிருஷ்டிப்பதில் பிரதான வெளிப்பாடாக அமைவது யாது?
1) செவிப்புல வெளிப்பாடு 2) நிலையான சித்திரிப்பு 3) ஆங்கிக சித்திரிப்பு
4) காண்பிய வெளிப்பாடு 5) ஆஹார்ய சித்திரிப்பு ( )



agaram.lk
Scanned with CamScanner

11) யப்பானிய நாடக வடிவங்களில் அதிகம் சமயச்சடங்குடன் தொடர்புடையதாக அமைவது யாது
1) கபூக்கி 2) புண்றாக்கு 3) நோ
4) கியோஜின் 5) கொவாக்கா

12) கிரேக்கத்தில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய கதைகளை வைத்து நாடகம் ஆக்கியவர்?
1) ஈஸ்கலஸ் 2) சோபோகிளிஸ் 3) யூரிப்பிடிஸ்
4) அரிஸ்ரோபென்ஸ் 5) மெனான்டர்

13) நம்பமுடியாத காட்சிகளைக்கொண்டு நாடகம் எழுதிய உரோம அவலச்சுவை நாடக ஆசிரியர் யார்
1) புளோட்டஸ் 2) ரெறன்ஸ் 3) செனேக்கா
4) மெனான்டர் 5) அரிஸ்ரோபென்ஸ்

14) கத்தோலிக்க திருச்சபையின் செல்வாக்கு நாடகத்தில் அதிகமாகக் காணப்பட்ட காலம் யாது?
1) கிரேக்க காலம் 2) மத்திய காலம் 3) மறுமலர்ச்சிக் காலம்
4) எலிசபெத் காலம் 5) உரோம காலம்

15) கிரேக்க அரங்கு ஐரோப்பாவில் செல்வாக்குப் பெறுவதற்கு பாலமாக அமைந்த நாடு எது?
1) ஜேர்மனி 2) பிரான்ஸ் 3) உரோம்
4) ஸ்பெயின் 5) எலிசபெத்கால இங்கிலாந்து

16) அவலச்சுவை, மகிழ்நெறி ஆகிய இரண்டு நாடக வடிவங்களிலும் உச்ச புகழைப் பெற்றிருந்த நாடக ஆசிரியர் யார்?
1) சேக்ஸ்பியர் 2) பென்ஜோன்சன் 3) கிறிஸ்தோப்பர்மார்லோ
4) ஜோன்லிலி 5) தோமஸ்கிட்

17) ஐரோப்பிய நவீன அரங்கு எந்த நாடக ஆசிரியரின் நாடகத்துடன் இனங்கண்டு கொள்ளப்படுகின்றது
1) அன்ரன் செக்கோவ் 2) ரெனசி வில்லியம்ஸ் 3) இப்சன்
4) மேயர்கோல்ட் 5) சாமுவேல்பெக்கற்

18) கவிதைகளைப் பயன்படுத்தி மிகச் சிறந்த சமஸ்கிருத நாடகங்களை உருவாக்கியவர் யார்?
1) பாசர் 2) அஸ்வகோஷர் 3) காளிதாஸர்
2) ஹிஹெர்சர் 5) சூத்திரகர்

19) பாஞ்சாலிசபதம் நாடகம் எழுதிய கவிஞர் யார்?
1) ந.முத்துசாமி 2) பாரதியார் 3) வேலுசரவணன்
4) வ. ஆறுமுகம் 5) இந்திராபார்த்தசாரதி

20) சீனாவில் தோற்றம் பெற்ற நாடக வடிவம் யாது?
1) பலே 2) புண்றாக்கு 3) நோ
4) பீஜிங்ஒப்பேரா 5) கபுக்கி

21) கிரேக்க அவலச்சுவை நாடகத்தில் சித்திரிக்கப்படாத அம்சம் யாது?
1) அவலநாயகனின் பெருவீழ்ச்சி
2) அவலநாயகனின் அவலத்தவறு
3) அவலநாயகன் விதிசாபத்தால் பாதிக்கப்படுவான்
4) அவலநாயகன் தன்னிலும் பார்க்க மேலான சக்தியுடன் முரண்படுவான்
5) அவலநாயகனின் மரணம்

22) அந்நியமாதல் என்ற உத்தி பிரதானமாக அமையும் நாடக வடிவம் யாது?
1) யதார்த்தவாத அரங்கு 2) குரூர அரங்கு 3) வறிய அரங்கு
2) காவிய அரங்கு 5) சுற்றுச்சூழல் அரங்கு

23) கதாசிஸ் பார்வையாளரிடம் ஏற்படுத்தும் பிரதான உணர்வுகள்
1) விரக்தி, பயம் 2) பயம், இரக்கம் 3) இரக்கம், விரக்தி
4) கருணா, கோபம் 5) கோபம், பயம்



agaram.lk
Scanned with CamScanner

24) ஊமச் சித்திரிப்பிற்கு அடிப்படையாக அமையும் அம்சம் யாது?
1) உடல்  2) குரல்  3) ஆடல்
4) மனம்  5) சிரசு ( )

25) யதார்த்தவாதத்திற்கு எதிராக முதலில் தோற்றம் பெற்ற பிரதான அரங்கு யாது?
1) ஒடுக்கப்பட்டோரின் அரங்கு  2) குரூர அரங்கு  3) வறிய அரங்கு
4) காவிய அரங்கு  5) சுற்றுச்சூழல் அரங்கு ( )

26) சேக்ஸ்பியரின் நாடகங்களில் தனிமொழி வெளிப்படுத்துவது எவற்றை எடுத்துக்காட்ட உதவுகிறது?
1) பழிவாங்கும் உணர்வைக்காட்ட
2) சந்தேக உணர்வைக்காட்ட
3) பாத்திரங்களின் அந்தரங்க உணர்ச்சியைக் காட்ட
4) பாத்திரங்களின் உறவுநிலையினைச் சித்திரிக்க
5) பாத்திரங்களின் சூழ்ச்சியைச் சித்திரிக்க
( )

27) அங்கம் அங்கமாக நாடகங்கள் எழுதும் முறையைக் கொண்டிருந்த புராதன நாடக மரபு?
1) கிரேக்கம்  2) இந்தியா  3) சீனா
4) ஜப்பான்  5) உரோம் ( )

28) ஒண்ணக்கத்தா என்ற பெண் நடிப்பு முறையைக் கொண்டிருக்கும் அரங்கு?
1) நோ  2) பீஜிங்ஒபேரா  3) பலே  4) கபுக்கி  5) புண்றாக்கு ( )

29) ஆரொடுநோகேன் என்ற நாடகம் எந்த வகையைச் சேர்ந்தது?
1) சிறுவர் நாடகம்  2) பாடசாலை நாடகம்  3) வரலாற்று நாடகம்
4) அரசியல் நாடகம்  5) யதார்த்த நாடகம் ( )

30) அரங்கு ஓர் அறிமுகம் எழுதியவர்களின் தொகுதி?
1) சி. மௌனகுரு, கா. சிவத்தம்பி, காரை, சுந்தரம்பிள்ளை
2) கா. சிவத்தம்பி, சி. மௌனகுரு, க. திலகநாதன்
3) சி.மௌனகுரு, க. சிதம்பரநாதன், க. திலகநாதன்
4) கா.சிவத்தம்பி, க. திலகநாதன், குழந்தை ம. சண்முகலிங்கம்
5) கா. சிவத்தம்பி, சி. மௌனகுரு, குழந்தை ம. சண்முகலிங்கம் ( )

31) கோடை நாடகம் எந்த வகையைச் சார்ந்தது?
1) காவிய நாடகம்  2) வரலாற்று நாடகம்  3) பா நாடகம்
4) கூத்து நாடகம்  5) நாட்டிய நாடகம் ( )

agaram.lk

32) பேராசிரியர் கணபதிப்பிள்ளையினால் சித்திரிக்கப்பட்ட சமூகம் யாது?
1) மட்டக்களப்புச் சமூகம்  2) யாழ்ப்பாணச் சமூகம்  3) கொழும்புச் சமூகம்
4) வன்னிச் சமூகம்  5) மலைநாட்டுச் சமூகம் ( )

33) வாழ்க்கை அர்த்தமற்றது என்ற உணர்வை தோற்றுவிக்கும் நாடக வடிவம் யாது?
1) காவிய அரங்கு  2) குரூர அரங்கு  3) படிம அரங்கு
4) வறிய அரங்கு  5) அபத்த அரங்கு ( )

34) சுகிர்த விலாசசபை தொழிற்பட்ட இடம்?
1) யாழ்ப்பாணம்  2) கொழும்பு  3) மட்டக்களப்பு
4) காங்கேசன்துறை  5) மலையகம்

35) அநுகர்ணம் என்பது
1) போலச் செய்தல்  2) நாடக இயல்பு  3) உலகியல் இயல்பு
4) சுவை  5) வஸ்து ( )

36) அருகில் காட்டப்படும் படத்தின் மூலம் வெளிப்படுத்தப்படும் ரஸம்?



1) சிருங்காரம்  2) ஹாஸ்யம்
3) பீபத்சம்  4) பயானகா
5) ரௌத்திரம் ( )



Scanned with CamScanner

37) இப்படத்தில் காட்டப்படும் நாடகவடிவம்?
1) சிறுவர் நாடகம்
2) யதார்த்த நாடகம்
3) ஒடுக்கப்பட்டோரின் அரங்கு
4) பாடசாலை நாடகம்
5) வரலாற்று நாடகம்



38) அருகில் காட்டப்படும் படத்தில் உள்ள தாய் நாடகத்தை எழுதியவர்?
1) இப்சன்
2) பேட்டோல்பிறெக்ற்
3) சாமுவேல்பெக்கற்
4) அன்ரன் செக்கோவ்
5) ஸ்ரெனசி வில்லியமஸ்



39) இவர் உருவாக்கிய நாடக நிறுவனம் யாது?
1) நாடக அரங்கக் கல்லூரி
2) நடிகர் ஒன்றியம்
3) அவைக் காற்றுகைக் கலைக்கழகம்
4) சுகிர்த விலாசசபை
5) வசந்தகானசபா



40) அருகில் உள்ள நாடக வடிவம்
1) கூத்து
2) சிறுவர் நாடகம்
3) பாடசாலை நாடகம்
4) தெருவெளி நாடகம்
5) அரசியல் நாடகம்



agaram.lk

## பகுதி – II

❖ பின்வரும் வினாக்களில் A, B ஆகிய பிரிவுகளில் இரண்டு வினாவீதம் தெரிவு செய்து எல்... நான்கு வினாக்களிற்கு விடை தருக.

### பிரிவு – A

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

1) "நாடகம் வாழ்வினைப் போலச்செய்யும் எளிமையான கலையாகும்".
i) நாடகம் ஒன்றை உருவாக்குவதற்கு உதவும் மூலகங்களைத் தருக (3 பு...
ii) நாடகம் ஒன்றில் வெளிப்படுத்தப்படும் அம்சங்களை இனங்காண்க. (6 பு...
iii) நாடகக்கலையின் இயல்புகளைத் தருக. (6 பு...

2) "தொன்மைக்கால கிரேக்க அரங்கில் இன்றைய நவீன அரங்கில் பயன்படும் பல்வேறு அம்சங்கள் ... நிற்கிறது"
i) கிரேக்க அவலச்சுவை நாடகத்தின் இயல்புகளைத் தருக. (5 புள்...
ii) கிரேக்க மகிழ்நெறி நாடகத்தின் இயல்புகளைத் தருக. (5 புள்...
iii) கிரேக்க சற்றயர் நாடகத்தின் இயல்புகளைத் தருக (5 புள்...



Scanned with CamScanner

3) "பாரம்பரிய அரங்குகள் ஒவ்வொன்றும் தமக்கே உரிய தனித்துவமான அரங்க வெளிகளைக் கொண்டுள்ளன" பின்வரும் அரங்குகளை விளக்குக (5 புள்ளி)

i) காமன் கூத்து (5 புள்ளி)

ii) எலிசபெத்கால அரங்கு (5 புள்ளி)

iii) மகிடிக்கூத்து

## பிரிவு – B

❖ எவையேனும் இரண்டு வினாவிற்கு விடையளிக்குக.

4) "இந்திய சமஸ்கிருத அரங்கானது ஐரோப்பிய அரங்க மரபில் இருந்து குறிப்பிடத்தக்க அளவு வேறுபடுகின்றது"

i) நாட்டியதர்மி, லோகதர்மி பற்றி விளக்குக. (5 புள்ளி)

ii) சமஸ்கிருத அரங்கின் இயல்புகள் பற்றி விளக்குக. (5 புள்ளி)

iii) மகாகவி காளிதாஸரின் நாடக ஆக்க அம்சங்கள் பற்றி விளக்குக. (5 புள்ளி)

5) "பாத்திரச் சித்தரிப்பிற்கு அரங்குகள் முதன்மை வழங்குகின்றன".

i) நாட்டிய சாஸ்திரத்தில் பாத்திர சித்தரிப்புக்கு அபிநயங்கள் பயன்படுமாற்றை விளக்குக. (5 புள்ளி)

ii) யதார்த்தவாத நாடகங்களில் பின்பற்றப்படும் "பாத்திரமாக வாழுதல்" பற்றி விளக்குக. (5 புள்ளி)

iii) காவிய அரங்கில் வலியுறுத்தப்படும் "பாத்திரமாக நிகழ்த்திக் காட்டுதல்" பற்றி விபரிக்குக. (5 புள்ளி)

6) பின்வருவனவற்றில் ஏதேனும் மூன்று பற்றி விளக்குக.

i) டித்திராம் பாடல்

ii) போலச் செய்தல்

iii) மறைபொருள் நாடகம்

iv) மீலாங்பாங்

v) ஒகஸ்தாபோலின் அரங்கு

(3×5 = 15 புள்ளி)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை, மார்ச்- 2015
# Term Examination, March - 2015

| நாடகமும் அரங்கியலும் - II | தரம் :- 13 (2015) | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி - I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ சரியான விடையின் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.

1) கிரேக்க காலத்தில் நெறியாள்கை பணியில் ஈடுபட்டவர் யார்?
1) நடிகன் 2) கோரஸ் 3) நாடக ஆசிரியர்
4) கொறிக்கஸ் 5) அர்ச்சன் என்ற நீதிபதி (..........)

2) காட்சியமைப்பை பிரதானமாகக் கொண்ட அரங்க மரபு எது?
1) இசை நாடகம் 2) யதார்த்த நாடகம் 3) காவிய நாடகம்
4) வறிய அரங்கு 5) கண்ணுக்குப் புலனாகாத அரங்கு (..........)

3) ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கினை முன் வைத்தவர் யார்?
1) ஒகஸ்தாபோல் 2) அன்ரோனி ஆர்த்தோ 3) பிறெக்ற்
4) குறொட்டவஸ்கி 5) பீற்றர் புறூக் (..........)

4) வெவ்வேறு நிகழ்விடங்களை கருத்தில் கொண்டு நாடகத்தினை ஆற்றுகை செய்த ஐரோப்பிய அரங்கு யாது?
1) கிரேக்க அரங்கு 2) உரோம அரங்கு 3) எலிசபெத்கால அரங்கு
4) யதார்த்தலாத அரங்கு 5) காவிய அரங்கு (..........)

5) அரங்கியல் என்ற நூலை எழுதியவர்?
1) பேராசிரியர். க. சிதம்பரநாதன் 2) பேராசிரியர். சு. வித்தியானந்தன்
3) பேராசிரியர். கா. சிவத்தம்பி 4) பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை
5) பேராசிரியர். சி. மௌனகுரு (..........)

6) உலகியல் வழக்கு நாடக வழக்கு பற்றி முதலில் குறிப்பிடும் நூல் எது?
1) கவிதையியல் 2) அபிநவபாரதி 3) மேகதூதம்
4) நாட்டிய சாஸ்திரம் 5) தசரூபகம் (..........)

7) எழுத்து வல்லமையினால் தமிழ்மொழியை சிறப்பாகக் கையாண்டு நாடகங்களை படைத்தவர் யார்?
1) வேலுசரவணன் 2) ந. முத்துசாமி 3) அண்ணாத்துரை
4) வ. ஆறுமுகம் 5) பிரளயன் (..........)

8) இலங்கையின் நவீன தமிழரங்கில் ஆரம்பகால நெறியாளர்?
1) பேராசிரியர். சு. வித்தியானந்தன் 2) கலையரசு சொர்ணலிங்கம்
3) குழந்தை. ம. சண்முகலிங்கம் 4) பேராசிரியர். க. சிதம்பரநாதன்
5) தாஸீஸியஸ் (..........)

9) கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் முதலில் மேடையேற்றப்பட்ட இடம் எது?
1) கிழக்குப் பல்கலைக்கழகம் 2) ரவர்கோல்
3) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 4) கொழும்புப் பல்கலைக்கழகம்
5) பேராதனைப் பல்கலைக்கழகம் (..........)



agaram.lk
Scanned with CamScanner

10) பேராசிரியர் வித்தியானந்தனுக்கு மிகவும் புகழ் ஈட்டித் தந்த பிரதான நாடக பணியாக யாது?
1) கூத்தினை நவீன மயப்படுத்தியமை
2) அண்ணாவிமாரை கௌரவித்தமை
3) கூத்து நூல்கள் அச்சிட்டமை
4) அண்ணாவிமாருக்கு மாநாடுகள் நடத்திய
5) கூத்து தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டமை

11) மட்டக்களப்பைச் சேர்ந்த புகழ்பெற்ற நாடகக் கலைஞர் யார்?
1) தாஸீஸியஸ்
2) இ. சிவானந்தன்
3) நா. சுந்தரலிங்கம்
4) சி. மௌனகுரு
5) குழந்தை. ம. சண்முகலிங்கம்

12) ஆலயங்களில் நாடகம் நிகழ்த்தும் மரபைக் கொண்டிருந்த அரசு யாது?
1) சேர அரசு
2) சோழ அரசு
3) பாண்டிய அரசு
4) சங்ககால அரசு
5) நாயக்கர் அரசு

13) சிலப்பதிகாரம் என்ற நூலில் மாதவியின் ஆற்றுகை எத்தனை வயதில் இடம்பெற்ற கூறப்படுகின்றது?
1) பத்து
2) பதினொன்று
3) பன்னிரண்டு
4) பதின்னான்கு
5) பதினைந்து

14) தமிழ் நாட்டில் புகழ்பெற்ற தெருவெளி நாடகக் கலைஞன் யார்?
1) வேலு சரவணன்
2) இராமசாமி
3) பிரளயன்
4) மங்கை
5) இளையபத்மநாதன்

15) 18 பிசாசுகளின் ஊர்வலம் இடம்பெறும் சிங்களச் சடங்கு நாடக வடிவம் எது?
1) சன்னியக்கும
2) ரட்டயகும
3) கொகம்பஹறஸ்காரிய
4) மணிக்பால
5) சூனியம் சடங்கு

16) பேராசிரியர் எதிர்வீர சரச்சந்திரா தனது நாடகங்களுக்கான கதைகளை பெரும்பாலும் பெற்றார்?
1) வரலாற்று கதை
2) கற்பனைக் கதை
3) ஐதீகக் கதை
4) இலக்கியக் கதை
5) சமூகக் கதை

17) அண்மையில் யாழ்ப்பாணத்தில் தமது நாடகங்களை சிங்கள மொழியில் மேடையேற்றியவர்
1) பராக்கிரமதெரியெல்லே
2) தர்மசிறி பண்டாரநாயக்க
3) ஹென்றி ஜெயசேனா
4) பிரசன்னவிதானகே
5) முகைதீன்

agaram.lk

18) திருமறைக் கலாமன்றத்தினை தோற்றுவித்தவர் யார்?
1) வணக்கத்திற்குரிய மரியசேவியர் அடிகள்
2) வணக்கத்திற்குரிய தனிநாயகம் அடிகள்
3) வணக்கத்திற்குரிய மறைமலை அடிகள்
4) விபுலானந்த அடிகள்
5) பாலேந்திரா

19) "உடக்கு பாஸ்" எனும் நாடகவகை எப்பிரதேசத்துக்குரியது?
1) யாழ்ப்பாணம்
2) மட்டக்களப்பு
3) மலையகம்
4) மன்னார்
5) வன்னி

20) சொக்கரி நாடகம் நிகழ்த்தப்படும் இடம்?
1) தானாயம்பல
2) கரலிய
3) நாடகசபை
4) களத்துமேடு
5) சபய

21) சிங்கள நாடக உலகில் சிறுவர் நாடகத்துறையின் முக்கியஸ்தர்களுள் ஒருவர்?
1) ஹென்றி ஜெயசேனா
2) சிறியானி அமரசிங்க
3) சோமலதாசுபசிங்க
4) தர்மசிறி பண்டாரநாயக்க
5) முகைதீன்

22) இலங்கையில் ஆங்கில அரங்கின் முன்னோடி எனக் கருதப்படுபவர்?
1) ஜீபால்
2) ஈ. பெ. சி. லுடோவைக்
3) ஏனெஸ்ற் மக்கின்ரயர்
4) அழகுசுப்பிரமணியன்
5) எதிர்வீரச்சரச்சந்திரா

23) ஜப்பானிய அரங்கில் "டைகோ" எனக் குறிப்பிடப்படுவது?
1) மேடை அலங்காரம் 2) ஒருவகை மேளம் 3) ஒரு நடன அசைவு
4) ஒருவகை வேடமுகம் 5) ஒருவகைப் பாத்திரம் (..........)

24) நடிகமணி வைரமுத்துவின் பிரதான ஆற்றல் எது எனக் கருதப்படுகிறது?
1) பாடும் திறன் 2) வேடப் பொருத்தம்
3) சிறந்த உடல் வெளிப்பாடு 4) வேட உடை, ஒப்பனை வெளிப்பாடு
5) பாவபூர்வமான பாடலும் நடிப்பும்

25) ஒரு நாடகத்தின் விருப்பத்திற்குரிய சர்வாதிகாரி எனப்படுபவர்?
1) தயாரிப்பாளர் 2) நாடக ஆசிரியர் 3) நடிகர்
4) மேடை முகாமையாளர் 5) நெறியாளர் (..........)

26) 1970 களுக்கும் 1990 களுக்கும் இடைப்பட்ட காலத்தில் புகழ்பெற்ற நாடகத் தொகுதி
1) மண்சுமந்த மேனியர், கோடை, அபசுரம் 2) கோடை, விழிப்பு, உடையார்மிடுக்கு
3) புதியதொருவீடு, கடூழியம், சங்கிலி 4) துரோகிகள், சங்காரம், காலம் சிவக்கிறது
5) பம்மாத்து, வெறியாட்டு, சுந்தரம் எங்கே (..........)

27) ஒரு நாடகத்தை உருவாக்கிய பின்னர் ஆற்றுகை செய்வதற்கு முன்பாக செய்யப்படுவது.
1) வீடியோ எடுத்து பார்வையிடல்
2) நாடகத்துடன் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து கருத்துக்களைக் கேட்டறிதல்
3) ஊடகவியலாளர்களை அழைத்து கருத்துக்களைக் கேட்டறிதல்
4) நடிகர்களின் கருத்துக்களைக் கேட்டறிதல்
5) விமர்சனங்களின் கருத்துக்களைக் கேட்டறிதல் (..........)

28) எழுத்துரு இன்றி நாடகம் உருவாக்கப்படும் போது ஏற்படும் பலவீனமாக அமைவது யாது?
1) கற்பனைத்திறன் வளரும் 2) காலம் விரயமாகுதல்
3) குழு ரீதியான செயற்பாடாக அமையும் 4) தவறுகள் திருத்தப்படும்
5) சுதந்திரமாக படைப்பில் ஈடுபட முடியும் (..........)

29) இன்று பெருமளவில் நாடகம் நிகழ்த்தப்படாமைக்கு காரணமாக கருதப்பட முடியாதது யாது?
1) மக்களின் ஆர்வமின்மை
2) தொலைக்காட்சிகளின் வருகை
3) நாடகக் கலைஞர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படாமை
4) நாடகத்தின் ஆற்றலை உணராமை
5) நாடக ஆற்றுகைக்கான தேவைகள் காணப்படாமை (..........)

30) நாடகம் நடந்துகொண்டிருக்கும் பொழுது மேடையில் நின்று கடமையாற்றுவோராகக் கருதப்படாதவர்?
1) மேடை முகாமையாளர் 2) நினைவூட்டுனர் 3) ஒளியமைப்பாளர்
4) வேடஉடை ஒப்பனையாளர் 5) இசையமைப்பாளர் (..........)

31) நடிகர்களின் நடிப்புக்கும் அப்பால் நாடகத்தின் உணர்ச்சிகளைப் பார்ப்போருக்கு எடுத்துக்கூறுவதில் முக்கிய இடம்பெறுவது யாது?
1) பின்னணி இசை 2) வேடமுகம் 3) ஒளி விளக்குகள்
4) வசன உச்சரிப்பு 5) வேடஉடை (..........)

32) நடிகர்களின் அலங்காரம் என்பது?
1) ஆபரணம் 2) வேடமுகம் 3) வேடஉடை
4) முடிகள் 5) பொய்முடி (..........)

33) நாடகம் எனும் நாடக வடிவத்தின் தந்தை எனப்படுபவர்?
1) ஜோன் டீ. சில்வா 2) பீற்றர் சில்வா 3) கல்கிசை எந்திரிக் அப்புகாமி
4) பேலிஸ் அப்புகாமி 5) பிலிப்புச்சிஞ்சோ (..........)

agaram.lk



Scanned with CamScanner

34) கோலம் நாடக வடிவம் தமிழில் எந்த நாடகத்துடன் ஒப்பிடப்படுகிறது?
1) இசைநாடகம்
2) மகிடி
3) வசந்தன் கூத்து
4) கத்தோலிக்கக் கூத்து
5) வடமோடி


35) சிங்கள யதார்த்தலாத நாடகங்களை சமூக யதார்த்தத்தை தேடும் கலை மாற்றியமைத்தவர்?
1) குணசேன கலபதி
2) ஹென்றி ஜெயசேனா
3) சுகதபால டி சில்வா
4) சரச்சந்திரா
5) சோமலதா சுபசிங்க

36) இப்படத்தில் உள்ள இசைக்கருவி யாது?

1) மகரயாழ்
2) கோடுவாத்தியம்
3) கொம்பு வாத்தியம்
4) தம்புரா
5) கிணை

37) அருகில் உள்ள சிங்கள நாடக வடிவம்?

1) கொகம்பஹுங்காரிய
2) சன்னியக்குமா
3) ரட்டயகும
4) சூனியம் சடங்கு
5) மணிக்பால

38) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஒப்பனை எந்த நாடக வடிவத்திற்குரியது?

1) கதகளி
2) வடமோடி
3) தென்மோடி
4) தெருக்கூத்து
5) தெருவெளி

agaram.lk

39) அருகில் காட்டப்பட்டுள்ள நாடக படம் எதிர்வீரசரச்சந்திரனின் எந்த நாடக வடிவத்திற்குரியது

1) மனமே
2) பவாவதி
3) சிங்கபாகு
4) வேதகதன
5) பவகடதுறாவ

40) அருகில் காட்டப்பட்டுள்ள வேடமுகம் எந்த நாடக வடிவத்திற்குரியது?

1) சொக்கரி
2) நாடகம
3) நூர்தி
4) சன்னியக்கும
5) கோலம்

## பகுதி II

❖ பின்வரும் வினாக்களில் A, B ஆகிய பிரிவுகளில் இரண்டு வினாவீதம் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### பிரிவு - A

➢ எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1) "சேக்ஸ்பியர்" உலக நாடக ஆசிரியராகக் கருதப்படுவதற்குரிய மேதமைகளைக் கொண்டிருந்தார்"
   i) ஒதெல்லோ நாடகத்தில் அவலம் வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக. (5 புள்ளி)
   ii) யூலியஸ்சீசர் நாடகத்தில் அவலம் வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக. (5 புள்ளி)
   iii) சேக்ஸ்பியரின் அவலச்சுவை நாடகங்களாக இருந்தபோதும் ஒதெல்லோ, யூலியஸ்சீசர் நாடகங்கள் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபடுகின்றன எனக் கூறலாமா? என்று ஆராய்க. (5 புள்ளி)

2) "குறவஞ்சி சமயப் பிரச்சாரத்தை தன்னுள் கொண்டுள்ள ஒரு நாடக மரபு ஆகும்"
   i) திருக்குற்றால குறவஞ்சி நாடகத்தில் வரும் பாத்திரங்களைக் குறிப்பிடுக. (3 புள்ளி)
   ii) திருக்குற்றால குறவஞ்சி நாடகத்தில் பாடல்கள் எவ்வாறு அரங்கப் பண்பை தந்து நிற்கின்றன என்று விளக்குக. (6 புள்ளி)
   iii) திருக்குற்றால குறவஞ்சி நாடகத்தில் சமயக் கருத்துக்கள் வெளிப்படுவதற்கு உதவும் காட்சிகளைக் குறிப்பிட்டு அதில் வெளிப்படும் சமயப் பண்புகளை விளக்குக. (6 புள்ளி)

3) "மட்டக்களப்பில் காணப்படும் தொன்மையான நாடகங்களுள் அலங்காரரூபன் ஒன்றாகும்"
   i) அலங்காரரூபன் நாடகத்தில் வரும் பாத்திரங்களைத் தருக. (3 புள்ளி)
   ii) அலங்காரரூபன் நாடகத்தில் வெளிப்படுத்தப்படும் தென்மோடிக்கூத்தின் பண்புகளைத் தருக. (6 புள்ளி)
   iii) அலங்காரரூபன் நாடகத்தில் கையாளப்பட்ட உத்திகளைத் தருக. (6 புள்ளி)

### பிரிவு - B

➢ எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

4) "பிரதேசத்திற்கு பிரதேசம் கூத்து மரபானது பொது இயல்புகளையும், தனித்துவங்களையும் கொண்டு விளங்குகிறது"
   i) மட்டக்களப்பு கூத்து மரபினை விளக்குக. (5 புள்ளி)
   ii) மன்னார் கூத்து மரபினை விளக்குக. (5 புள்ளி)
   iii) மலையக கூத்து மரபினை விளக்குக. (5 புள்ளி)

5) "நவீன இலங்கை தமிழ் அரங்கானது பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்றது"
   i) தாஸீஸியஸின் நாடகப் பணியை விளக்குக. (5 புள்ளி)
   ii) பேராசிரியர். சி. மௌனகுருவின் நாடகப் பணியை விளக்குக. (5 புள்ளி)
   iii) பேராசிரியர். கா. சிவத்தம்பியின் நாடகப் பணியை விளக்குக. (5 புள்ளி)

6) பின்வருவனவற்றில் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   i) கொகம்பஹுங்கரிய
   ii) பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் நாடகங்கள்
   iii) பாலுமகேந்திராவின் / பாலச்சந்தரின் திரைப்படங்கள்
   iv) வானொலி நாடகம்
   v) தொலைக்காட்சி நாடகம்

(3 × 5 = 15 புள்ளி)



agaram.lk
Scanned with CamScanner